People Studies
*Head Office*
"studying the people is for the people"

122 / 69, Vanniyar Street
Choolaimedu, Chennai 600 094
*Mobile:* 6379348523
*E-mail:* peoplestudies@gmail.com
*Website:* www.peoplestudies.xyz

05. வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சிக்கு வரக்கூடிய கட்சி மற்றும் முதல்வர் குறித்து விக்கிரவாண்டி வாக்காளரின் **ஊகம்** *(முதல் ஐந்து இடங்கள்):*

| ஆட்சியமைக்கும் கட்சி குறித்த ஊகம் | |
|---|---|
| *திமுக* | ***42.6*** |
| *பாட்டாளி மக்கள் கட்சி* | ***20.2*** |
| *அஇஅதிமுக* | ***19.5*** |
| *தமிழக வெற்றிக் கழகம்* | ***10.7*** |
| *நாம் தமிழர் கட்சி* | ***4.4*** |

| அடுத்த முதல்வர் குறித்த ஊகம் | |
|---|---|
| *மு.க. ஸ்டாலின்* | ***41.5*** |
| *அன்புமணி* | ***20.6*** |
| *எடப்பாடி பழனிச்சாமி* | ***19.5*** |
| *விஜய்* | ***11.8*** |
| *சீமான்* | ***4.0*** |

*மேலுள்ள இரு அட்டவணைகளின்படி, விக்கிரவாண்டியைப் பொருத்த அளவில் (அ) அதிமுக-வையும் எடப்பாடி பழனிச்சாமியையும் மூன்றாமிடத்திற்குத் தள்ளி, பாமக-வும் அன்புமணியும் இரண்டாம் இடம் பெறுகின்றனர். (ஆ) அவ்வாறே, நாதக-வையும் சீமானையும் விட அதிகமான ஆதரவைத் தவெக-வும் விஜய்-ம் பெறுகின்றனர்.* **(தமிழக அளவிலான தரவுகளுக்குக் காண்க: நாடாளுமன்றத் தேர்தலுக்கு முந்தைய (05.04.2024) மக்கள் ஆய்வின் ஏப்ரல் கருத்துக் கணிப்பு.)**

06. வாக்குக்குப் பணம்:

*(அ) வாக்குக்குப் பணம் வாங்குவது குறித்து வாக்காளரிடையே பரபரப்பும் குதூகலமும் விளங்குகிறது.*

| | |
|---|---|
| பணம்-பரிசு தரும் எல்லா வேட்பாளரிடமும் வாங்கிக்கொள்வேன் | - 85.5 |
| ஏதேனும் ஒரு வேட்பாளரிடமிருந்து மட்டும் | - 13.2 |

*(ஆ) பணம் வாங்கிய கட்சிக்கே வாக்களிக்க வேண்டிய அவசியமில்லை என்ற மனப்போக்கு அழுத்தமாக வெளிப்படுகிறது.*

| | |
|---|---|
| வாக்களிக்க வேண்டிய அவசியமில்லை | - 72.4 |
| பணம் தந்த எல்லா வேட்பாளருக்கும் குடும்ப வாக்குகளை நிரந்து வழங்குவோம் | - 21.2 |
| ஒரு வேட்பாளரிடம் மட்டும் வாங்கிக்கொண்டு அவருக்கு வாக்களிப்பேன் | - 5.6 |

*(இ) ஒப்பீட்டளவில், ஈரோடு - கிழக்கு இடைத்தேர்தல் போல மிகையான ஆடம்பரம், ஆர்ப்பாட்டம் இல்லை என்றாலும் பண-விநியோகத்தில் ஈரோட்டை விஞ்சி நிற்கிறது விக்கிரவாண்டி. சாதி, மதம், சினிமா/ஊடகம், கட்சி உள்ளிட்ட அனைத்துக் காரணிகளையும் உள்வாங்கி இயக்கும் மைய-அச்சுக் காரணியாக* (supervening factor) *பணம் திகழ்கிறது. அதாவது, வெற்றிக்குப் பணம் மட்டுமே போதாது - ஆனால் பணமின்றி எக் காரணியும் வேலைசெய்யாது என்பது நிதர்சனம் மட்டுமல்ல, புள்ளியியல் ரீதியான உண்மையுமாகும்.*

07. முத்தாய்ப்பாக... *எண்ணியல் மற்றும் பண்பியல் கூறுகளை ஒன்றிணைத்து* (triangulation) *காணும்போது, திமுக - பாமக இவற்றுக்கு இடையேயான ஆதரவு இடைவெளி இனிக குறுகும் சாத்தியங்களே அதிகம் என்றாலும், திமுக வேட்பாளரின் வெற்றி நிச்சயம் எனக் கணிப்பில் தெரியவருகிறது.*

சிறுமலர் ஜெகன்
துணை இயக்குநர், மக்கள் ஆய்வு
*Mobile:* 9944866223

சென்னை பத்திரிக்கையாளர் சங்கம்
08 ஜூலை 2024

People Studies
Head Office
"studying the people is for the people"
122 / 69, Vanniyar Street
Choolaimedu, Chennai 600 094
Mobile: 6379348523
E-mail: peoplestudies@gmail.com
Website: www.peoplestudies.xyz

# விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

## களஆய்வு முடிவுகளின் சாராம்சம்

தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கவனத்தின் குவியமாகத் திகழும் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் களத்தில், மாநில அளவில் பிரதான ரெட்டைக் கட்சிகளில் ஒன்றாகிய அஇஅதிமுக இடைத்தேர்தலைப் புறக்கணித்திருக்க, இதுவரை இடைத்தேர்தல் முறையை விமர்சித்து வந்த பாட்டாளி மக்கள் கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் களமிறங்கி இருக்க, கள்ளச் சாராய மரணங்கள் உள்ளிட்ட சங்கடங்களிடையே தொகுதியைத் தக்கவைக்கத் திராவிட முன்னேற்றக் கழகம் போரில் குதித்துள்ள பிரச்சாரச் சூழலில், பேராசிரியர் **டாக்டர் ச. ராஜநாயகம்** வழிகாட்டுதலில், மக்கள் ஆய்வகத்தில் முறையான பயிற்சி பெற்ற 24 களத் தகவல் சேகரிப்பாளர்கள் தொகுதியின் 90 இடங்களில் நேரடியாய்ச் சந்தித்த (ஜூலை 3, 4, 5) 1360 வாக்காளர்கள் வெளிப்படுத்திய எண்ணவோட்டங்களின் சாராம்சம்:

01. **இன்று வாக்களிப்பதாக இருந்தால்**, விக்கிரவாண்டி வாக்காளரிடையே கட்சிகளுக்கு வெளிப்படும் ஆதரவு:

| | |
|---|---|
| திமுக | 56.6 |
| பாமக | 37.5 |
| நாம் தமிழர் கட்சி | 4.0 |
| பிற வேட்பாளர்கள் | 0.4 |
| முடிவுசெய்யாதோர் | 1.5 |

02. **அதிமுக வாக்கு பிரியும் விதம்**: 2024 நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக-விற்கு வாக்களித்தாகக் கூறுவோரில் (மொத்த சாம்பிளில் 24.6 விழுக்காடு) பாதிக்கும் மேற்பட்டோர் பாமக-விற்கு வாக்களிக்கின்றனர்.

| | |
|---|---|
| பாமக | 52.2 |
| திமுக | 37.3 |
| நாம் தமிழர் கட்சி | 6.0 |
| பிற வேட்பாளர்கள் | 1.5 |
| முடிவுசெய்யாதோர் | 3.0 |

03. **வகுப்பு ரீதியாக**, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாக்கு மிகக் கணிசமாக பாமக-விற்கும், பட்டியலினம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாக்கு அறுதிப் பெரும்பான்மையில் திமுக-விற்கும் செல்கின்றன.

| | பாமக | திமுக | நாதக |
|---|---|---|---|
| பட்டியலினத்தவர் | 10.0 | 76.7 | 10.0 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 54.3 | 42.1 | 1.8 |
| பிற்படுத்தப்பட்டோர் | 15.2 | 80.4 | 4.4 |

04. **பாலினரீதியாக**, ஆண்களும் (மொத்த சாம்பிளில் 61.4%) பெண்களும் (மொத்த சாம்பிளில் 38.2%) வாக்களிக்கும் விதத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு வெளிப்படுகிறது.

| | பாமக | திமுக | நாதக |
|---|---|---|---|
| ஆண்கள் | 40.1 | 53.3 | 4.2 |
| பெண்கள் | 33.7 | 61.5 | 3.8 |